සබරගමුව පළාත් අධ්‍යාපන දෙපාර්තමේන්තුව
சபரகமுவ மாகாண கல்வித் திணைக்களம்
Sabaragamuwa Provincial Department of Education

**තෙවන වාර පරීක්ෂණය 2020** **11 ශ්‍රේණිය**
**மூன்றாம் தவணைப் பரீட்சை 2020** **தரம் 11**
**Third Term Test 2020** **Grade 11**

දෙමළ භාෂාව හා සාහිත්‍යය III
**தமிழ் மொழியும் இலக்கியமும் III**
**Tamil Language & Literature III**

පැය දෙකයි
**இரண்டு மணித்தியாலம்**
***Two hours***

***கவனிக்க :-***

- ***ஐந்து வினாக்களுக்கு மாத்திரம் விடை எழுதுக 1,2,3,4 ஆகிய வினாக்களுக்கும் 5,6,7, ஆகிய வினாக்களில் ஒரு வினாவிற்கும் விடை எழுதுக***
- ***இவ் வினாப்பத்திரத்திற்கான புள்ளிகள் 80 ஆகும்***

சுருக்கமான விடை தருக

1) தேனருவி திரையெழும்பி வானின் வழியொழுகும்.
இதனை சந்தி பிரித்து எழுதுக

2) அரவுயர்த்தோனுடன் மறு சூதாடி நீர் வென்ற
அந்நாள் அவன்தான் சொன்ன
விரதமொழி தவிராமல் வெங்கானம்
போய் மீண்டீர்

(அ)அரவுயர்த்தோன் என குறிப்பிடப்படுபவன் யார்?.
(ஆ)விரதமொழி என்பதன் பொருள் யாது?.

3) (அ)தத்தைவிடு தூது என்ற நூலை இயற்றியவர் யார்?.
(ஆ)பெண்ணே வெம்புலிவாய் மானென்ன வீணே கொடுத்திடுவார்... என்பதன் கருத்து யாது?

4) (அ)அகத்திணை, புறத்திணையில் குறுந்தொகை நூல் எதனுள் அடங்குகிறது?.
(ஆ)’நற்றேர்ப் பொய்கை ஊரன் கேண்மை செய்து இன் புற்றனெம்’ என்ற அடியின் பொருள் யாது?.

5) (அ)‘வாக்குண்டாம்’ என்ற நூலுக்கு அப்பெயர் வரக் காரணம் யாது?.
(ஆ)இந்நூலை வேறு எவ்விதம் அழைப்பர்?. இயற்றியவர் யார்?.

6) ‘இன்துணைவ னிராகவனுக்கு இலக்குவற்கும் இளையவற்கு
மெனக்கு மூத்தான்’ யாரால் யாருக்கு கூறப்பட்டது?.

7) (அ) நாவலர் அவர்கள் எழுந்தமை எவ்வாறு உவமானத்துடன் காட்டப்பட்டுள்ளது?.
(ஆ) எவை நாண நாவலர் நடந்தார்?.

8) (அ) விரும்பும் யாவும் பெறமாட்டாது. இருப்பவர்கள் யாரெனப் பாரதியார் சாடுகிறார்?.
(ஆ) பாரதியார் நிலையற்ற உலகைப் பாடும் அடியை மட்டும் தந்து விளக்குக.

9) எந்தையும் உடையேம் எம் குன்றும் பிறர்.
இங்கு எந்தை, குன்று என கூறப்பட்டவை எவை?.

10) 'கழா அக்கால் பள்ளியுள் வைத்தற்றாற் சான்றோர்
குழா அத்துப் பேதை புகல்'
(அ) கழா அக்கால் என்பதன் பொருள் என்ன?.
(ஆ) குறட்பாவின் பொருளை தெளிவுபடுத்துக.

**(02) பின்வரும் செய்யுள்களையும் உரைநடைப் பகுதிகள் ஒவ்வொன்றினையும் வாசித்த பின் வினாக்களுக்கு விடை தருக.**

(1) அடக்கம் உடையார் அறிவிலர் என்று எண்ணிக்
கடக்கக் கருதவும் வேண்டா மடைத்தலையில்
ஓடுமீன், ஓட உறுமீன் வருமளவும்
வாடி இருக்குமாம் கொக்கு.

(அ) மடைத்தலை உறுமீன் என்பதன் கருத்து யாது?.
(ஆ) அடக்கம் உடையவரின் சிறப்பு என்ன?.

(2) அற்றைத் திங்கள் அவ்வெண் நிலவில்
எந்தையும் உடையேம் நம் குன்றும் பிறர்
கொள்ளார், இற்றைத் திங்கள் இவ்வெண் நிலவில்
வென்று எறி முரசின் வேந்தர் எம் குன்றும்
கொண்டார் எந்தையும் இலமே!.

(அ) அற்றைத்திங்களின் நிலை என்ன?.
(ஆ) இற்றைத் திங்களின் நிலை என்ன?.

(3) கூட்டிற் பசுங்கிளிபோற் கோதையரை யெப் பொழுதும்
வீட்டி லடைத்து வைக்கும் விரகிலருக்கியாதுரைப்போம்
பூட்டித் திறந்தெடுக்கும் பொருளாகக் கருதினரோ ?
கேட்போர் நகைப்பதுவுங் கேட்டிலரோ பைங்கிளியே !
கிஞ்சுகவாய்ப் பைந்தொடிபாற் கிளத்தாய் பசுங்கிளியே

(அ) உவமை அணிக்கு உதாரணம் ஒன்று தந்து விளக்குக.

(ஆ) பூட்டித்திறந்தெடுக்கும் பொருளாக எதனைக் குறிப்பிடுகிறார்.

(4) மக்கள் நலப்பண்பு (கொள்கை) நம் பண்பாட்டின் ஓர் அடிப்படை கொள்கையாகும். ஒரு செயலால் வருகின்ற பிற நலன்களைக் கருதாமல் நன்மையை நன்மைக்காகவே செய்ய வேண்டும் தமிழ் புலவர்கள் இதனை உணர்ந்து செய்யுள்களை யாத்தனர். இன்று நாம் செய்த நன்மையானது மறு பிறப்புக்கு நன்மை கிடைக்க வேண்டும் என்பதற்காகவும் இன்றெனினும் ஈதலே நன்று எனவும் கூறியுள்ளனர்.

(அ) நன்மையை எவ்விதம் செய்ய வேண்டும்?

(ஆ) இன்றெனினும் ஈதல் நன்று ஏன்?.

(5) சில கம்பியூட்டர்கள் வழிக்குக் கொண்டுவரப் பல நாட்கள் ஆகும். பிகு செய்து கொண்டே இருக்குமாம் ஆனால் அதனுடன் ஒன்றித்துச் சேர்ந்து விட்டால் உயிர் உள்ளவரை சேர்ந்து ஒத்துழைக்கும் இவ்வகையினைப் பெண் என்றார்.

(அ) பிகு செய்யும் கம்பியூட்டர்கள் எவை?.

(ஆ) பெண் எனப்படும் கம்பியூட்டர்கள் எவை?.

**(3) "தந்தை விடுதூது" எனும் கவிதையினை அடிப்படையாகக் கொண்டு**

(அ) தூதுப் பிரபந்தத்தின் பண்புகள்.

(ஆ) பெண்ணடிமைச் செயற்பாடுகள்.

(இ) பெண்விடுதலைக்கான முயற்சிகள்.

ஆகியவற்றை தெளிவுபடுத்துக

(15 புள்ளி)

**அல்லது**

**'பாரதியார் சுயசரிதை' என்ற கவிதையிலே**

(அ) பாரதியார் சிறுமிக்காக காத்திருந்த விதம் காட்டப்படுமாறு.

(ஆ) பாரதியார் காதல் வேட்கையால் தான் இழுப்புற்றமையும், பலநாட்கள் கழித்தமையும் காட்டும் விதம் என்பவற்றை விளக்குக.

(15 புள்ளி)

**(4) அற்றைத் திங்கள் நாடகம் என்ற பாடத்தை ஆதாரமாகக் கொண்டு**

(அ) பாரி மகளிர், தந்தையார் தம்மை வளர்த்த விதம் பற்றிப் புலம்பும் விதம் காட்டப்படுமாற்றினை விளக்குக.

(ஆ) புலவர் கபிலரின் வார்த்தைகள் பாரியை இழந்த கவலையின் வெளிப்பாட்டைப் பிரதிபலிக்கின்றன நியாயப்படுத்துக.

**அல்லது**

**"தனிப்பாடல்கள்" என்ற பாடத்தை அடிப்படையாகக்கொண்டு**

(அ) நெல்லின் மதிப்பும், பொன்னின் மதிப்பும் சமமானது என்ற பஞ்சகாலத்தின் நிலை எவ்வாறு சித்திரிக்கப்படுகிறது.

(ஆ) வள்ளல் சீதக்காதியின் கொடைச்சிறப்பு காட்டப்படும் விதம்.

**பின்வரும் 5, 6, 7 ஆகிய வினாக்களுள் ஏதாவது ஒன்றைத் தெரிவுசெய்து விடை எழுதுக.**

**(5) வாக்குண்டாம் 'அடக்கம் உடையார்' என்ற பாடலில் அடக்கம் உடையாரின் சிறப்பு, அடக்கம் உடையார் அறிவிலர் அல்லர் என்பது காட்டப்படும் விதம், என்பவற்றை விளக்குக.**

**(6) 'கிருஸ்ணன் தூது சருக்கத்தில்' அத்தினாபுரத்தின் (குருநாட்டின்) பெருமையும் செழிப்பும் காட்டப்படும் விதம்**

**(7) 'தமிழ்ப் பண்பாடு' என்ற கட்டுரையை ஆதாரமாகக் கொண்டு தமிழ் பண்பாட்டின் குறிக்கோள்கள் எவை என்பதை விளக்குக**